**எண். 124/2025** **நாள்: 11.09.2025**

**<u>தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) (அறிவிக்கை எண். 09/2024 நாள் 26.07.2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 20.02.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

கீழ்க்கண்ட பதவிகளுக்கான **ஆறாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு** தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை - 600 003-ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

| | |
|---|---|
| **ஆறாம் கட்ட** மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு<br><br>**நாள் : 25.09.2025** | வேதியலாளர் மற்றும் இளநிலை வேதியலாளர் ( பதவிக் குறியீடுகள் 1913 மற்றும் 1914) |
| | இளநிலை பகுப்பாய்வாளர் (பதவிக் குறியீடு: 2006), காப்பாட்சியர் (வேதியியல் பாதுகாப்பு) (பதவிக் குறியீடு: 2127), பண்டகக் காப்பாளர் (பதவிக் குறியீடு: 1768), உதவி மேலாளர் சேமிப்பு கிடங்கு / இளநிலை உதவியாளர் (பதவிக் குறியீடு: 3388), உதவி மேலாளர் (பதவிக் குறியீடு: 3349), கணினியர் மற்றும் தடுப்பூசி பண்டகக் காப்பாளர் (பதவிக் குறியீடு : 3201) மற்றும் துணை மேலாளர் (தர நிர்ணயம்) (பதவிக் குறியீடு : 3348) |

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண்/இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வரத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தரராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்